**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 02.06.2026</u>**

**OS.178/2022**

**வா.சா.1 திரு.நவீன்குமார்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தற்போது நான் தாக்கல் செய்துள்ள வாய்தாநீட்டிப்பு விக்கிரய உடன்படிக்கை எந்த தேதியில் செய்யப்பட்டது என்றால் 14.09.2021–ல் செய்யப்பட்டது. எத்தனை வருடம் வாய்தா நீட்டிப்பு செய்யப்பட்டது என்றால் 1 ஒருடம். அந்த ஒரு வருடம் முடிவதற்கு உள்ளாகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். நிலத்தை அளவீடு செய்துதான் ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் நிலத்தை அளவீடு செய்யவில்லை. எதற்காக ஒரு வருடம் காலநீட்டிப்பு செய்யப்பட்டது என்றால் அந்த நேரத்தில் பாக்கி கிரய தொகை என்னால் கட்டமுடியவில்லை, அதனால் காலநீட்டிப்பு செய்துகொண்டோம். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலிவேலை செய்கிறேன்.

2. பாக்கி கிரைய தொகை எவ்வளவு என்றால் ரூ.25,000/–. ஏற்கனவே 2 வருடம் ஒப்பந்த காலத்தில் என்னால் ரூ.25,000–ம் பாக்கி தொகை தயார் செய்ய முடியாமல் போனதால்தான் மீண்டும் அந்த தொகையை செலுத்த 1 வருடம் காலநீட்டிப்பு செய்துகொண்டேனா என்றால் சரியல்ல. நான் முதலில் போட்ட வாய்தா தேதிக்குள் பாக்கி கிரைய தொகை ரூ.25,000ம்

நான் கைவசம் தயார் செய்து வைத்திருந்தேன் அப்போது பிரதிவாதியை அழைக்கும்போது அவர்கள் கிரையம் செய்து கொடுக்க மறுத்துவிட்டார்களா என்றால் சரிதான். அவ்வாறு 2 வருட காலத்திற்குள் நான் பாக்கி கிரைய தொகையை தயார் செய்து வைத்திருந்தும் பிரதிவாதி கிரயம் செய்து கொடுக்க மறுத்ததால் நான் ஏதாவது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா அல்லது நீதிமன்றத்தில் வழக்கு ஏதாவது தாக்கல் செய்தேனா என்றால் அவ்வாறு நான் எதுவும் செய்யவில்லை, ஆனால் முன்னெச்சரிக்கை அறிவிப்பு மட்டும் அனுப்பினேன். முன்னெச்சரிக்கை அறிவிப்பு அனுப்பிய பிறகும் ஏன் வாய்தா 1 வருடம் நீட்டித்து ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்றால் திரும்பவும் பிரதிவாதியை கிரயம் செய்து கொடுக்க சொல்லிகேட்டபோது நீதிமன்றம் சென்றால் செலவாகும் என்று சொன்னார்கள், அதனால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக 1 வருட காலம் வாய்தா நீட்டிப்பு செய்துக்கொண்டோம்.

3. கால நீட்டிப்பு ஒப்பந்த பத்திரம் எங்கு எழுதப்பட்டது என்றால் நினைவில்லை. அந்த ஒப்பந்த பத்தரித்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் பன்னீர் செல்வம் என்பவரும் காஞ்சனாவின் கணவர் சங்கர் என்பவரும் கையொப்பம் செய்தார். வழக்கு தாக்கல் செய்யும்போதே காலநீட்டிப்பு செய்ததாக சொல்லும் ஒப்பந்தத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அண்ணா ஒருவர் எதற்கும் தேவைப்படும் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதால் அப்போது தாக்கல் செய்யவில்லை, வழக்கு தாக்கல் செய்யும்போது நகல் மட்டும் தாக்கல்

செய்துள்ளேன். கிரைய ஒப்பந்த வாய்தா நீட்டிப்பு ஒப்பந்த பத்திரம் கடந்த 4 வருடமாக என்னிடம் இல்லை, அது பிரதிவாதியிடம் தான் இருந்தது, பிரதிவாதி பெற்ற 4 இலட்சத்தை திருப்பி கொடுத்துவிட்டார்கள் அதனால் ஒப்பந்தத்தை ரத்து செய்து பத்திரம் தயாரிக்க என்று சொல்லி பிரதிவாதியிடம் இருந்த வாய்தா நீட்டிப்பு ஒப்பந்த பத்திரத்தை பிரதிவாதியிடம் நான் பெற்று இந்த வழக்கிற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. தற்போது பாக்கி கிரயத்தொகை ரூ.25,000/—த்தை நான் தயார் செய்து வைத்தும் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்காததால்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் சொல்வது எல்லாம் பொய்யானது, பிரதிவாதி காஞ்சனா அட்வான்ஸ் தொகை 4 இலட்சம் திருப்பி கொடுத்துவிட்டார், அவரிடம் இருந்துதான் வாய்தா நீட்டிப்பு ஒப்பந்த பத்திரத்தை பெற்று நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்துள்ளேன் அதனால் இந்தவழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 16:07:32 +0530